


ஸ்ரீ சுகுமாரின்

# விளையாட்டு பொம்மை

ஸ்ரீ சுகுமாரின்

# விளையாட்டு பொம்மை

தயாரிப்பு : T. R. மஹாலிங்கம்

| | |
|---|---|
| கதை : | சுகுமார் கதை இலாகா |
| வசனம் : | A. L. நாராயணன் |
| பாடல்கள் : | K. P. காமாக்ஷிசுந்தரன் |
| | தஞ்சை N. ராமையாதாஸ் |
| | K. D. சந்தானம் |
| சங்கீத டைரக்ஷன் : | T. G. லிங்கப்பா |
| ஒளிப்பதிவு : | R. சம்பத் |
| ஆர்ட் டைரக்ஷன் : | V. M. வத்தூர்கர் |
| மேக்கப் : | A. ராமதாஸ் |
| | M. கஜபதி |
| ஆடைகள் : | M. K. வேணுகோபால் |
| | M. துரை |
| புரோஸஸிங் : | தமிழ் நாடு ஸினி லெபரட்டரி |
| எடிடிங் : | R. தேவராஜன் |
| உதவி : | V. P. கிருஷ்ணன் & C. பழனி |
| உதவி டைரக்ஷன் | கொத்தமங்கலம் ராமு |
| புரடக்ஷன் நிர்வாகம் : | N. திருவேங்கடம் |
| ஸ்டுடியோ : | ரேவதி & ரோஹிணி |

டைரக்ஷன் : T. R. ரகுநாத்

| | |
|---|---|
| T. R. மஹாலிங்கம் | மோஹன் |
| K. சாரங்கபாணி | சதாசிவம் |
| B. R. பந்துலு | ராமசாமி |
| V. K. ராமசாமி | குமாரசாமி |
| T. K. ராமச்சந்திரன் | சுந்தர் |
| K. A. தங்கவேலு | சந்துரு |
| K. சாயிராம் | சபாபதி |
| K. ராமு | கார்மேகம் |
| N. திருவேங்கடம் | போலீஸ் இன்ஸ்பெக்டர் |
| K. S. சொக்கலிங்கம் | ரங்கசாமி |
| குமாரி கமலா<br>பேபி ராதா | அநுராதா |
| E. V. சரோஜா | வசந்தா |
| M. லக்ஷ்மிபிரபா | லலிதா |
| C. T. ராஜகாந்தம் | மரகதம் |
| K. S. அங்கமுத்து | பஞ்சவர்ணம் |
| B. சாரதாம்பாள் | சாரதா |
| K. S. ராஜம் | கனகம் |

மணி, முராலி, K. N. ராமலிங்கம்

மற்றும் பலர்

# விளையாட்டு பொம்மை

## — அறிமுகம் —

" விதிக்கு மனிதன் ஜெகத்தினிலே
ஒரு விளையாட்டு பொம்மை "

என்ற நீதிக்கு உவமையாக இருந்தார் மேலூர் ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர் ராமசாமி. தனது இரு குழந்தைகளையும் விட்டு, மனைவியை யமனிடம் ஒப்புவித்து சிறைபுக நேரிட்டபோது.

முதல் குழந்தை ஐந்து வயது பையன் சந்துரு "சதாரம் நாடக சபை" முதலாளி சதாசிவம் என்பவர் பராமரிப்பில் வளர,

கைக்குழந்தை லக்ஷ்மி காலச்சுழலில் சிக்கி, கைகள் பலமாறி, அநுராதா என்ற செல்லப் பெயருடன் மங்கைப் பருவமடைந்து இறுதியில் விஜயபுரம் எஸ்டேட் வீட்டில் வேலைக்காரியாக அமருகிருள். அந்த எஸ்டேட் இளைய முதலாளி மோஹனின் கண்ணோட்டம் அவள்மேல் விழ முற்போக்காக அறிவு திரட்டிய காரணத்தால் அவன் அவளை மனைவியாக்கிக்கொள்ள முடிவு கட்டுகிருன்.

விதியின் சதியும், அந்த எஸ்டேட் மாப்பிள்ளை குமாரசாமி அவர்களின் காம விகாரமும் இவ்விளம் காதலர்களைப் பிரிக்கின்றன. ஒருவரை ஒருவர் எங்கெங்கோ தேடி மலைகின்றனர்.

இன்பங்கள் சில, துன்பங்கள் பல. இறுதியாக எல்லோரும் ஓர் குலமாக மனமொத்த காதலர்கள் ஒன்ருக, பிரிந்தார் கூடியும், சூழ்ச்சியாளர் சிக்கியும் மங்களமாக முடிவு பெறுவதும் விதியின் கூற்றேயாகும்.

— சுபம் —

# பாட்டுகள்

1 **பின்னணி**

பாடல்: தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர்: T. R. மஹாலிங்கம்

**தொகையரு**

விதிக்கு மனிதனே ஜெகத்தினிலே
விளையாட்டு "பொம்மையடா"

பாட்டு

விதிக்கு மனிதனே ஜெகத்தினிலே
ஒரு விளையாட்டுப் பொம்மையடா !!
துதிக்கும் கரங்களே—
துரோகத்தினால் கொலை செய்யவும் துணியுமடா
சொப்பனத்தின் விந்தையடா—யாவும்
சொந்த மென்பதில்லையடா !! (விதி)

காய்த்த மரமீதிலே - வீணே
கல்லெறிந்தே - பலர்
தொல்லை செய்வது - போலே
காரிய உலகமடா - மனிதா
வீரியம் பேசுமடா !! (விதி)

மாயா உலகமடா—யாவும்
மனக் கோட்டையாகுமடா
மனம் போலவே நடந்தால் தெய்வமேதடா,
மதியாத காலமடா - இறைவனை
மதியாத காலமடா !! (விதி)

2

## கனகம்

பாடல்: தஞ்சை ராமையாதாஸ்
பாடியவர்: A. P. கோமளா

மலையேறி மாவிளக்கு போடுவார்—தங்கச்
சிலைபோல பிள்ளை வரம் தேடுவார்— (மலையேறி)
என் கண்ணே கண்மணியே
மாதவத்தாலே உன்னையே அடைந்தேன்
வாழ்வினிலே
செந்தேனே—என் மானே செல்வமும் நீயே
மாற்றில்லாத் தங்கமே...... (மலையேறி)
ஓடிவா கண்ணே ஓடிவா
தத்தி தத்திச் செல்லமாகவே
தவழ்ந்து நடந்து ஓடிவா— (ஓடிவா)
சதங்கை சப்தம் ஜல் ஜல் என
தங்கச் சிலையே ஜில் ஜில் என
ஆடவா - கண்ணே - ஆடவா

3

## அநுராதா

பாடல்: தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர்: சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

கலைச் செல்வமே வாழ்கவே
நிலையர்கவே என்றுமே உலகிலே பரதக்

(கலைச்செல்வமே)

அலை மகள் மலர் சூட - மலைமகள் சேர்ந்தாட
மானும்—மழுவும் - மதியுலாவ நடனம்
ஆனந்தமுடன் ஆடிய நடராஜனின்

(கலைச்சேல்வமே)

இயலிசை நாடகமே சிறந்து விளங்கிட
இகமேல் கலைஞன் கண்ட கனவல்லவோ
இனிதான தமிழின் சுவை தானமுதமே
இனிமேல் புவனமதில் இதுதான் செல்வமே
ஸ்ருதிலயம் ஜதி மேளம்
சுகந்தரும் இசை பாவம்
காணும் அழகின் இணையில்லாத கலையே
காசினிதனில் ஆனந்த நடமர்டிடும்

ஜதி

கலைச்செல்வமே வாழ்கவே !!

## 4 வஸந்தா

பாடல்: K. P. காமாக்ஷிசுந்தரன்

பாடியவர்: P. G. கிருஷ்ணவேணி

கண்ணழகி என்னைப்போல யாருண்டு எனைக்
கண்டு மயங்கித் திரும்பிடுமே கருவண்டு
கரும்பைக் கண்டு விரும்பிடாத எறும்பில்லை - நல்ல
பருவப் பெண்ணை விரும்பிடாத ஆண் இல்லை
(கண்ணழகி)

என் இடையைக் கண்டு மின்னல் வெட்குமே - எழில்
அன்னமும் நடையைக் கண்டு நிக்குமே
வண்ண மலர் ரோஜாவும் கசக்குமே - என்
வார்த்தையாலே எவர் மனதும் இனிக்குமே (அழகு)

## 5 அநுராதா—கோரஸ்

பாடல்: K. P. காமாக்ஷிசுந்தரன்

பாடியவர்: சூலமங்கலம் ராஜலக்ஷிமி குழுவினர்

பெரியோர்கள் சொல்லைப்போல
முறையோடு நடப்பதுதான்
அறியாத பெண்களுக்கு இன்பமே - அது
தெரியாமல் நடப்பதுதான் துன்பமே - நம்ம
(பெரியோர்)

அற நெறியோடு நாம் வாழ வேணுமே
வாழ வேணுமே - நல்ல
அறிவோடு அன்பு சேர வேணுமே - நம்ம

(பெரியோர்கள்)

நல்லவளாய் பேரெடுக்க நாணமச்சம்
வேணுமடி - நாணமச்சம் வேணுமடி—
இல்லையென்றால் ஊரார்கள்
எள்ளி நகைப்பார்களடி—
இதுதானே வாழ்வில் உண்மையாமடி - ஆமாம்
இதுதானே வாழ்வில் உண்மையாமடி - நம்ம

(பெரியோர்கள்)

நாட்டு நாகரீகத்தை நீ நழுவ விடாதே - நம்ம
வீட்டு வேலை செய்வதை கைவிட்டு விடாதே
ஆக்கத் தெரியணும்
குழந்தையைக் காக்கத் தெரியணும்
அன்போடு எவரிடமும் பேசத் தெரியணும்
பாட்டும் தெரியணும்
தமிழ் படிக்கத் தெரியணும்
ஆட்டமாடி புருஷன் மனசை ரசிக்கத்
தெரியணும் - தெரியுதா........?
அக்கம் பக்க முள்ளவர்கள்
அநுசரிப்பும்வேணுமடி - அநுசரிப்பும் வேணுமடி
மைத்துனர்கள் மாமன் மாமி மன மகிழ வேணுமடி
இதுதானே வாழ்வில் உண்மையாமடி - ஆமாம்
இதுதானே வாழ்வில் உண்மையாமடி - நம்ம

(பெரியோர்கள்)

பாடல் அமரகவி பாரதியார்

பாடியவர் : T. R. மஹாலிங்கம்

மோகத்தைக் கொன்றுவிடு - அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு - அல்லாலதில்
சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு - அல்லாலென்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத்திருந்துலகம் - இங்குள்ளன
யாவையும் செய்பவளே !— (மோகத்தை)

பந்தத்தை நீக்கிவிடு - அல்லாலுயிர்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு - அல்லாலிதைச்
செத்த வுடலாக்கு
இந்தப் பதர்களையே - நெல்லாமென
எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளிலுமே - உள்ளே நின்.
றியங்கி யிருப்பவளே
உள்ளம் குளிராதோ - பொய்யாணவ
ஊன மொழியாதோ
கள்ள முருகாதோ - அம்மா ! பக்திக்
கண்ணீர் பெருகாதோ ?
வெள்ளக் கருணையிலே - இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ ?
விள்ளற்கரியவளே - அனைத்திலு
மேவி யிருப்பவளே !— (மோகத்தை)

## 7 மோகன் & அநுராதா

பாடல்: தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர்: T. R. மஹாலிங்கம் & சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

இன்பவானில் உலாவும் நிலாவே நீ
சற்று நில்லாயோ வழி சொல்லாயோ
ஏழை வாழ்வில் உலாவும் நிலாவே நீ
உண்மை சொல்லாயோ வழி சொல்லாயோ
காதல் தெய்வீகமாய் என்றும் காணுமா
கானல் நீரர்கவே மாறிப் போகுமா
வாழ்வில் என் தியாகமே என்றும் மாறுமா
வான வில்லாகவே எண்ணலாகுமா
எந்தன் வாழ்வில்
ஏழை வாழ்வில்
எங்கள் வாழ்வில் உலாவும் நிலாவே நீ
உண்மை சொல்வாயா ஓடி மறைவாயா !!
வளர் பூங்காவில் ரீங்காரம் செய்தாலுமே
மலர் தானுகவே வண்டை நாடுமா
மாலைத் தென்றலிலே அநுராக கீதம்
மனம் போலவே வந்து பாடுமே
கனவாகுமா
என் மனம் மாறுமா
நிலை மாருதா
பழி சேராதா
எந்தன் வாழ்வில்
ஏழை வாழ்வில்
எங்கள் வாழ்வில் உலாவும் நிலாவே நீ
உண்மை சொல்வாயா ஓடி மறைவாயா !

8 அநுராதா

பாடல்: தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர். சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

தொகையரு

கண்ணில் ப்ரஸன்னமான கலையே
கண் அயர்ந்தால் காணும் - இன்ப நிலையே

பாட்டு

ஜோதியான வெண்ணிலவே
தூது சொல்லாயோ
சோதனையால் வேதையான
சேதி சொல்லாயோ— (ஜோதி)

ராகு கேது சூழ்ந்ததாலே
சோகமாய் நின்றேனே
திஜாகம் செய்த காதலின்பம்
கனிந்திடவே - மகிழ்ந்திடவே
தூது சொல்லாயோ— (ஜோதி)

9 அநுராதா

பாடல்: தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர்: சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

ஜில் ஜில் ஜில் என
ஆனந்தமாய் - தென்றல்
அலைமோதுதே - இன்பக் காவினிலே
தேன் மலர் வண்டினம் போலே - மனம்
தெய்வீகக் காதலினாலே— (ஜில்-ஜில்)

காதல் உலகில் நான் இனிமேலே
காணும் இன்பம் வாழ்விலே - எந்தன் வாழ்விலே
கனியும் சுவைபோல் இணைபிரியாமல்
காத்திருந்த வாழ்விலே
கனவுபோல கலைந்து விடாமல்
கருணை செய்வாய் - வாழ்விலே - இன்ப வாழ்விலே
கண்ணான காதலன்
என்னாசை காதலன் - ஆ—ஆ!
வந்திடுவாரே - காரில்
தந்திடுவாரே - நேரில்
மெய்யான காதல் பொய்யாகுமா
மனம்போல வாழ்வேன் சந்தேகமா—

10

## மோகன்

பாடல்: K. P. காமாக்ஷிசுந்தரன்
பாடியவர்: T. R. மஹாலிங்கம்

### தொகையரு

முல்லைமலர் கொடியின் நிழலிலே
மோகனப்புது நிலவின் ஒளியிலே
நம் உள்ளம் ஒன்ருய்ச் சேர்ந்த நிலைதனை
உயிர் உள்ளளவும் மறந்து வாழ்வேனே !!

### பாட்டு

ஓ.........இன்பக் கலை மோகினி..........ஓ
எந்தன் கண்ணின்மணி............
காணாத இன்பம் தந்தாயே நீ - ஓ
மனதில் நின்ருயே நீ............ (இன்ப)

கானக் குயில்போல பாடும் உன்கானத்வனி
வானத்துலவும் மாமதியழகை வென்ருயே நீ
மனதில் நின்ருயே நீ என் வாழ்வை வென்ருயே நீ

(இன்ப)

கண் அயர்ந்தாலும் உன்னை மறவேனே
கனவிலும் உன் நினைவுதானே
வெண்மதி காண விளையாடினேம் நாமே
நிம்மதியாய் இன்பம் அடைவோமே நாமே
மனதில் நின்ருயே நீ என் வாழ்வை வென்ருயே நீ

(இன்ப)

11 ## மோகன்

பாடல்: அமரகவி பாரதியார்

பாடியவர்: T. R. மஹாலிங்கம்

தீர்த்தக் கரையினிலே - கண்ணம்மா
செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன் - நிலாவிலே
பாங்கியோடென்று சொன்ஞய் - கண்ணம்மா
வார்த்தை தவறிவிட்டாய் - கண்ணம்மா
மார்பு துடிக்குதடி
பார்த்த விடத்திலெல்லாம் - உன்னைப்போல்
பாவை தெரியுதடி - கண்ணம்மா—

(தீர்த்தக்கரை)

மேனி கொதிக்குதடி—
தலை வேதனை செய்குதடி - கண்ணம்மா
வானிலிடத்தை யெல்லாம் - வெண்ணிலா
வந்து தழுவுதுபார் - கண்ணம்மா
மோனத்திருக்குதடி - வையகம்
மூழ்கித் துயிலினிலே - கண்ணம்மா
நானொருவன் மட்டிலும் பிரிவென்பதோர்
நரகத்துழலுவதோ - கண்ணம்மா— (தீர்த்தக்கரை)

கூடிப் பிரியாமலே - ராவெல்லாம்
கொஞ்சிக் குலாவியங்கே
ஆடி விளையாடியே - உன் மேனியை
ஆயிரம் கோடி முறை
நாடித் தழுவி மனக் - குறை தீர்ந்து நான்
நல்ல களி யெய்தியே
பாடிப் பரவசமாய் - நிற்கவே—
தவம் பண்ணியதில்லையடி - கண்ணம்மா

(தீர்த்தக் கரையினிலே!!)

12

பாடல்: K. P. காமாக்ஷிசுந்தரன்

பாடியவர்: சூலமங்கலம் ராஜலக்ஷிமி & ராணி

(கஜல்)

மேகத்தை நிகர்த்த வண்ணன்
மென் மலரைப் போன்ற கண்ணன்
நாகத்தின் சிரசுமீது நடம்புரியும் பாதனை நீ

(பாட்டு)

அழைத்து வருவாயடி அடி சகியே
அழகே உருவாய் அமைந்த கோபாலனே
பழகியதை மறந்து பல பெண்களை நினைந்து
அலையும் கள்வனைக் கண்டு அந்தரங்கத்தை மொழிந்து
(அழைத்து)

மயிலாடும் இன்ப காட்சி மேவும் சோலையே
குயில்பாடும் இன்பமான மாலைவேளையே
மணம் வீசும் முல்லையோடு வண்டு பேசுதே
இளம் மானே உன்னைக் காண கண்கள் கூசுதே
வசந்த காலத்தின் தனிமை வாட்டுதே - அது
இசைந்த காதலின் கருத்தைக் காட்டுதே
நம் மனது ஒன்று சேர்ந்ததே - இளம்

பருவம் வந்து வாய்ந்ததே - நம்
மனது போல வாழும் நல்ல நாளும் தேவையே

(மயிலாடும்)

13 அநுராதா

பாடல்: K. D. சந்தானம்

பாடியவர்: குமாரி கமலா

இனிக் காண்பது என்றோ நானே - இனி நானே
சென்று காணவும் வகை யறியேனே
கற்பனைச் சிறகொடிந்து போனேனே - வீணானேனே !!
(இனி)

அறியாத காதலை நெஞ்சம் - கனிவாகப் பேசியே !
ஒரு நாளும் வாழ்வில் உன்னை - மறவேன் என்றேகினர்
விதியின் செயல் எவ்விதமாமோ—
வேதனையடைந்து மனம் வாடுதே - மனம் வாடுதே—

(இனி)

ஏழை என் எண்ணமெல்லாம் இனிதே ஈடேறுமா ?
இருள் மூடி வீணிலே பழி வந்து சேருமா ?
பாழும் சமுதாய நீதி பகையாளியாகுமா ?
பாய் மரமில்லாத ஓடம் போலவே என் காதல்
பலியாகுமா...............
பலியாகுமா.............. ?

(இனி)

சாந்தி பிரஸ், சென்னை-1.

SRI SUKUMAR PRODUCTIONS

SSP

## "எமது தீபாவளி வெளியீடு"

பல பிரபல நக்ஷத்திரங்கள்

முதன்முறை

ஒன்று சேர்ந்து நடிக்கும்

ஓர் உன்னத

சமூகப் படம்

Shanti Press, Madras-1